# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2053 • ஜூலை 30, 2022 Weekly E-paper • July 30, 2022




# கலைஞரின் பேனா!

சுப.வீரபாண்டியன்

## தமிழ் பரவட்டும் !

மா.உதயகுமார்

## தெற்கிலிருந்தே வரலாறு சதுரங்கம் ஆடிய காட்சி !

தலையங்கம்

## இடைநிற்றலுக்கு வழிவகுக்கும் புதிய கல்விக் கொள்கை!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூலை 30, 2022 Weekly E-paper ● July 30, 2022




# கலைஞரின் பேனா!



சுப.வீரபாண்டியன்

ஏதேனும் ஒன்றைத் தேடிப்பிடித்து, தமிழக அரசுக்கு எதிராய், திமுகவிற்கு எதிராய்க் கொண்டுவந்து நிறுத்திவிட வேண்டும் என்பதில் ஒரு கூட்டம் எப்போதும் கவனமாக இருக்கிறது.

இப்போது அவர்களுக்குக் கிடைத்திருப்பது கலைஞரின் பேனா!

ஆம், கலைஞரின் பேனா போன்ற ஒரு சிலையை, அவர் நினைவிடத்திற்கு அருகில், கடலில் வைத்திடும் திட்டத்தைத் தமிழக அரசு அறிவித்துள்ளது. இன்னும் அது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. ஆனாலும், பொறுக்க முடியாதவர்கள் பலர் இப்போதே புலம்பத் தொடங்கி விட்டார்கள்.

ஒரு பேனாவுக்குச் சிலையா? அதுவும் 80 கோடியிலா? இனிமேல் அவருடைய கண்ணாடி, செருப்பு எல்லாவற்றிற்கும் சிலை வைப்பார்களா? - இப்படி ஒரு கூச்சல் திட்டமிட்டு எழுப்பப்படுகிறது. பேனாவுக்குச் சிலை வைப்பதெல்லாம் சேட்டை என்கிறார் , சேட்டையைத் தவிர வேறு எதையும் அறியாத ஒரு சின்ன மனிதர்!

அது ஒரு பேனாவோ, வெறும் பேனாவோ இல்லை. தமிழ்நாட்டில் கோடிக்கணக்கான இளைஞர்களைத் தட்டியெழுப்பிய பேனா. அந்தப் பேனா, அய்யாவின் கைத்தடி! அண்ணாவின் நுண்ணறிவு! கலைஞரின் கைவாள்! அவருடைய 14 ஆம் வயதில், எழுத்துவதற்காகத் தலைகுனிந்த அந்தப் பேனா, இன்றுவரையில், எத்தனையோ தமிழர்களைத் தலைநிமிர வைத்துள்ளது!

முழுநேர எழுத்தாளர்களால் கூட எழுத முடியாத அளவிற்கு எழுதிக் காட்டியவர் தலைவர் கலைஞர்! அவருடைய வாழ்க்கை வரலாறு மட்டும் 6 தொகுதிகள் - 4162 பக்கங்கள்! உடன்பிறப்புக்கு ஓயாமல் கடிதங்கள்! 75 திரைப்படங்களுக்கான கதை, வசனம்! அளவிறந்த அரசியல் கட்டுரைகள்! சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் என்று இன்னொரு பக்கம் இலக்கியச் சித்திரங்கள்! எல்லாவற்றையும் எழுதிக் குவித்த அந்தப் பேனா, சிலையாக நின்று இன்னும் பலரை எழுதத் தூண்ட வேண்டும் என்பதுதான் நோக்கம்!

“நான் எழுதவில்லை, விரல்களால் சிந்திக்கிறேன்” என்பார் எழுத்தாளர் ஐசக் ஆசிமோவ். அது கலைஞருக்கும் பொருந்தும்.

அது சரி, அதற்காக 80 கோடி ரூபாய் மக்கள் வரிப்பணத்தைச் செலவழிப்பதா என்று குமுறுகிறார்கள். அந்தப் பணத்தில் மக்களுக்கு நல்ல திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடாதா என்று கேட்கின்றனர். மக்களுக்கான பல நல்ல திட்டங்களை அறிவித்தபோதெல்லாம், இப்படி இலவசத் திட்டங்களால், மக்களைச் சோம்பேறி ஆக்குகின்றனர் என்று ஆதங்கப்பட்ட அதே மனிதர்கள்தான் இப்போது இப்படிப் பேசுகிறார்கள்!

ஏன், மக்களுக்கான நல்ல திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றவே இல்லையா? எவ்வளவு வேலைவாய்ப்பு முகாம்கள், எவ்வளவு நலத்திட்டங்கள், மாணவர்களுக்கு ஊக்கமளிக்கப் பாடநூல், மிதிவண்டி முதலான பல பொருள்கள், இப்போது புதிதாகக் காலைச் சிற்றுண்டி என எத்தனை திட்டங்கள் அறிவிக்கப்பட்டாலும் இவர்கள் கண்மூடிக்கொள்வார்கள்.

இந்தப் பேனா சிலைக்கு 80 கோடி செலவா என்று கேள்வி கேட்பவர்கள், பிரதமரை மேடையில் வைத்துக் கொண்டு நம் முதல்வர் ஆற்றிய 9 நிமிட உரை தமிழ்நாட்டிற்கு 9000 கோடி ஜிஎஸ்டி வரி நிலுவைத் தொகையைக் கொண்டு வந்தது குறித்துப் பேசவே மாட்டார்கள்!

ஓர் அரசு என்றால் பல்வகைப் பணிகளையும்தான் மேற்கொள்ள வேண்டியிருக்கும். இதோ இப்போது நடந்துகொண்டிருக்கும் உலக அளவிலான சதுரங்க விளையாட்டுப் போட்டிக்கு ஏன் இவ்வளவு செலவு என்று கேட்பது சரியா? விளையாட்டு, இசை, கலை, இலக்கியம் என்று எல்லாவற்றிற்கும்தான் அரசு செலவு செய்யும். பேனா என்பது ஒரு குறியீடு. கலை இலக்கிய ஆர்வத்தைத் தூண்டுவதே அதன் உள்ளீடு!

சரி, இதற்கு முன்பு இப்படிச் செலவு செய்யப்பட்டபோதெல்லாம் இவர்கள் எங்கே போயிருந்தார்கள்? 2012ஆம் ஆண்டு எம்ஜிஆர் நினைவிடத்தைப் புதுப்பிக்க அதிமுக அரசு 43 கோடி செலவிடவில்லையா? அப்போது 43 கோடி என்றால், 10 ஆண்டுகளுக்குப் பின் அந்தத் தொகையின் இன்றைய மதிப்பு என்ன? குஜராத்தில் வைக்கப்பட்டுள்ள படேல் சிலைக்கு, மாநில அரசு, ஒன்றிய அரசு எல்லாம் சேர்ந்து ஏறத்தாழ 3000 கோடி செலவு செய்துள்ளார்களே! வரும் அக்டோபர் மாதம் மராத்தியத்தில் நிறுவப்பட இருப்பதாகத் திட்டமிட்டுள்ள சத்ரபதி சிவாஜி சிலை 696 அடி உயரம் கொண்டதாக அல்லவா இருக்கப் போகிறது. அதற்காகச் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ள தொகை 3643,78 கோடி ஆயிற்றே! அதனையும் தாண்டி அது 5000 கோடி வரையில் ஆகும் என்று சொல்கின்றனர். அது மக்கள் வரிப்பணம் இல்லையா? அது குறித்தெல்லாம் இந்த ‘மக்கள் நல விரும்பிகள்’ ஏன் குரல் கொடுக்கவில்லை? உங்கள் எஜமானர்களுக்கு ஒரு சட்டம், எங்கள் தலைவருக்கு ஒரு சட்டமா?

ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்கிறோம் -

கலைஞரின் பேனா காவியம் சொல்லும்!

கலைஞரின் பேனா காலத்தை வெல்லும்!!

●

# தமிழ் பரவட்டும்!

மா.உதயகுமார்

ஒன்றிய அரசு எந்தெந்த வழிகளில் தமிழர் உரிமையைப் பறிக்க முடியுமோ அந்தந்த வழிகளில் பறித்து வருகின்றது. அதில் முதன்மையான ஒன்று மொழியுரிமை. ஒன்றிய அரசின் பல்வேறு துறைகளுக்குமான ஒரே பணி என்பது, இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணித்து மற்ற மொழிகளை, அதிலும் குறிப்பாகத் தமிழை நசுக்குவதாகும். அப்படி ஒன்றிய அரசின் ஒரு துறையான இந்தியக் கலாச்சார உறவுக்கான கவுன்சில் (ஐ சி சி ஆர்) அதன் பங்கிற்குத் தமிழை நசுக்கும் பணியைச் செய்திருக்கிறது.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் இந்தியப் பேராசிரியர் இருக்கைகள் நிரப்ப ஐ சி சி ஆர் அண்மையில் ஒரு விளம்பரம் வெளியிட்டுள்ளது. இவ்விளம்பரத்தில் தமிழ் இடம் பெற்றுள்ளது. ஆனால் அதற்காக விண்ணப்பிக்கும் ஐசிசிஆர் இணையதளத்தில் தமிழ் இடம் பெறவில்லை. "உலகின் பழைமையான மொழியான தமிழ் இந்தியாவில் இருப்பதை எண்ணி ஒவ்வொரு குடிமகனும் பெருமைப்பட வேண்டும்" என்று பிப்ரவரி 26, 2002 அன்று வானொலியில் பிரதமர் மோடி பேசினார். ஆனால் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கான இருக்கைகளில் தமிழ் இல்லை. பார்ப்பனிய அரசின் சார்பாகப் பேசும் பிரதமர் தமிழ் பற்றி தம்பட்டம் அடிப்பதெல்லாம், தமிழை வளர்க்க அல்ல, தமிழை அழிக்கவே.

ஐசிசிஆர் இணையதளத்தில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் செயல்படும் இருக்கைகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. மொத்தம் 51 இருக்கைகள் செயல்பாட்டில் உள்ளன. இந்தப் பட்டியலில் தமிழ் இல்லை. அதாவது தமிழுக்கான இருக்கை எந்தப் பல்கலைக்கழகத்திலும் இல்லை. 51 இருக்கைகளில் இந்தி மொழிக்கு மட்டும் 14 இருக்கைகள் இருக்கின்றன. அடுத்தபடியாக சமஸ்கிருதத்திற்கு 5 இருக்கைகள் இருக்கின்றன. உருது மொழிக்குத் தனியே ஒரு இருக்கையும், இந்தியுடன் இணைந்து மற்றொரு இருக்கையும் என மொத்தம் இரண்டு இருக்கைகள் இருக்கின்றன. மற்ற இருக்கைகள் இந்தியக் கல்வி, வரலாறு, தத்துவம், பொருளாதாரம், புத்த மதம், பெங்காலி நாட்டுப்புற நடனம் ஆகிய துறைகளுக்கானவை.

போலந்தில் செயல்பட்டு வந்த தமிழுக்கான இரண்டு இருக்கைகள் தற்போது ஐசிசிஆர் வெளியிட்டுள்ள பட்டியலில் இடம் பெறவில்லை. போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகத்திலும், கிராக்கூப்யாகி எலோனியன் பல்கலைக்கழகத்திலும் அமைந்திருந்த தமிழ் இருக்கைகளுக்கு, பாஜக ஆட்சிக்கு வந்த கடந்த 2014 முதல் பேராசிரியர்கள் அமர்த்தப்படவில்லை. கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் ஜெயகிருஷ்ணனைத் தேர்வு செய்திருந்த ஐசிசிஆர் அவரையும் போலந்து அனுப்பவில்லை.

தமிழ் வளர்ச்சியைத் தடுப்பதையே கடமையாகக் கொண்டு ஒன்றிய அரசு செயல்பட்டு வருவதை ஐசிசிஆர் உறுதிப்படுத்தி உள்ளது. ஐ சி சி ஆரின் "வெளிநாடுகளில் இந்திய இருக்கைகள்" அறிமுகக் குறிப்பு கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது:

*"ICCR, in consultation with Indian Missions abroad, establishes Chairs of Indian Studies (Political Science, Philosophy, History, Sociology & Economics) & Hindi, Sanskrit In different foreign universities / institutes across the globe. The purpose of these Chairs, apart from familiarizing students about India its history and cultural Polity is to become a nucleus around which Indian Studies and Indian languages as given above to develop in academic institutions abroad."*

**Indian Council for Cultural Relations**

Azad Bhawan, I.P. Estate, New Delhi-110002, Phone: 011-23379309

**EMPANELMENT OF PROFESSORS IN INDIAN STUDIES ( POLITICAL SCIENCE, HISTORY, ECONOMICS, PHILOSOPHY, LAW, BUDDHISHT STUDIES) AND INDIAN LANGUAGES ( HINDI, URDU, SANSKRIT & TAMIL)**

Indian Council for Cultural Relations (ICCR) invites applications from suitable Indian Citizens to form a panel of Indian Studies (Political Science, History, Economics, Philosophy, Law, Buddhist Studies) and Indian Languages (Sanskrit, Hindi, Urdu & Tamil) Professors for deputation at ICCR's Chairs in Foreign Universities abroad.

Eligibility Criteria for Professors:

Scholars/Academicians, Regular employees of Central/State Universities, with a maximum age limit of 67 years, having doctoral degree from a recognized Institution affiliated by UGC, with at least 8 years of teaching experience at Graduate/post Graduate level in a recognized University or national level institute, are eligible to apply. The candidates should have adequate knowledge of English language as well as experience of delivering talks/orientation on History, Tradition, Art and Culture of India.

Interested candidates may apply through online mode along with supporting documents on ICCR's websites www.iccr.gov.in latest by **08-08-2022**. Details are available on ICCR's website www.iccr.gov.in.

அதாவது இந்திய மொழிகள் என்று ஐசிசிஆர் கருதுவது இந்தியையும் சமஸ்கிருதத்தையும் மட்டும்தான் என்பதை மிக வெளிப்படையாகவே தெரிவித்திருக்கிறார்கள். உள்நாட்டில் மொழி வளர்ச்சிக்காக நிதி ஒதுக்குவது தொடங்கி வெளிநாட்டில் இருக்கைகள் அமைப்பது வரை இந்திக்கும் சமஸ்கிருதத்திற்கும் அள்ளிக் கொடுக்கப்படுகிறது. மற்ற மொழிகளுக்குக் கிள்ளிக்கூடக் கொடுக்கப்படுவதில்லை. எல்லாம் இந்திய மொழிகள்தாம். ஆனால் தங்களை மட்டுமே சுத்தமான தேசப்பற்றாளர்களாக காட்டிக் கொள்ளும் இந்துத்துவாவாதிகள் ஏன் இந்தி சமஸ்கிருதம் என்னும் இரு மொழிகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து மற்ற மொழிகளைப் புறக்கணிக்கிறார்கள் என்பதை இந்தியாவில் வாழும் பல்வேறு மொழிகள் பேசும், அனைத்து மாநில மக்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தியும் சமஸ்கிருதமும் வளர்வது என்பது பார்ப்பனியமும் வர்ணாசிரமமும் வளர்கிறது என்பதன் பொருள். தமிழ் வளர்ந்தால் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் பார்ப்பனியத்திற்கு நேர் எதிரான சமத்துவ நெறி வளர்கிறது என்று பொருள். பார்ப்பனியம் சமத்துவத்திற்கு எதிரானது. இந்திக்கும் சமஸ்கிருதத்திற்கும் ஆதரவானது.

தமிழ் வளர்க்கும் பணியில் திராவிட இயக்கம் ஒரு நூறாண்டாகப் போராடி வருகிறது. இன்றும் இந்தியாவின் மற்ற மொழிகளுக்கும் சேர்த்துக் குரல் கொடுப்பது தமிழகம்தான். தமிழ் மொழி வளர்ச்சி தமிழர் உரிமை. தமிழர் உரிமையை மறுக்கும் ஒன்றிய அரசின் ஒரு துறையான ஐசிசிஆரின் செயல்பாட்டைக் கண்டித்துத் தமிழகத்தின் மக்களவை மாநிலங்களவை உறுப்பினர்கள் குரல் எழுப்பி, தமிழ் இருக்கைகள் செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும். ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## தெற்கிலிருந்தே வரலாறு சதுரங்கம் ஆடிய காட்சி !

இந்திய ஒன்றியத்தின் வரலாறு தெற்கில் இருந்து, குறிப்பாகத் தமிழ்நாட்டில் இருந்துதான் சொல்லப்பட வேண்டும், எழுதப்பட வேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாகப் பிரதமர் மோடியின் முன்னிலையில் உலகத்திற்கே சொல்லிவிட்டார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கலை பண்பாட்டு வாயிலாக, செஸ் ஒலிம்பியாட் விழாவில்.

ரஷ்யாவில் நடைபெற வேண்டிய 44 ஆம் 'செஸ் ஒலிம்பியாட்' என்ற உலகச் சதுரங்க விளையாட்டை, நான்கே மாதங்களில் உலகம் வியந்து பார்க்கும் வண்ணம் சென்னை, மாமல்லபுரத்தில் நடத்திக் காட்டியிருக்கிறார் தமிழ்நாடு முதல்வர் அவர்கள்.

186 நாடுகளின் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டச் சதுரங்க விளையாட்டு வீரர்கள் இதில் கலந்து கொள்கிறார்கள்.

விளையாட்டை, விளையாட்டாகப் பார்த்துக் கொண்டு இருக்கும் உலகில், விளையாட்டும் கலை, இலக்கிய, வரலாற்றுடன் பார்க்கப்பட வேண்டும் என்பதை உணர்த்தியிருக்கிறது இந்தச் சதுரங்க விளையாட்டு விழா.

கி.மு. 4000 ஆண்டுகளின் தமிழர்களின் வரலாறு, சேர - சோழ- பாண்டியர்கள், அவர்கள் ஆட்சியில் நடைபெற்ற கடல் வணிகம், வேளாண்வளம், சங்ககாலப் பாண்டியர்களின் தமிழ் வளர்த்த சங்கம், பிற்காலச் சோழ, பாண்டியர்கள் வரலாறு, சிலப்பதிகாரம், கலித்தொகை, இறுதியாக நிகழ்ந்த ஆழிப்பேரலை, அதையும் தாண்டி இன்று வரையான வரலாறுகளை நேரு உள்விளையாட்டரங்கில் காட்சிப்படுத்தியும், நடனங்களை வரிசைப்படுத்தியும், தமிழ்நாட்டைச் சேர்ந்த பியானோ இசைக் கலைஞரின் தேனிசை உள்ளிட்டவற்றை காட்சிப் படுத்திய சிறப்பை எப்படிச் சொல்லி வியப்பது? ஆரியர்கள் கணவாய்களின் வழியே இங்கு நுழைந்தது கி.மு.1500 என்பது இங்கு நினைக்கத் தக்கது.

ஆகவே தெற்கில் இருந்தே சொல்லப்பட வேண்டிய வரலாறையும், அறிவின் கூர்மையால் நகரும் (உலகச்)சதுரங்க விளையாட்டையும் ஒரு சேரச் சொன்ன தமிழ்நாடு அரசுக்கும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் பாராட்டுகள் குவிகின்றன, நாமும் பாராட்டுவோம் !

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## சென்னை மாவட்டப் பேரவை



24-07-22 அன்று, "நானும் என் திராவிட இயக்க நினைவுகளும் " "இது தான் ராமராஜ்யம் " இரு நூல்களின் திறனாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

## தாம்பரம் திராவிட நட்புக் கழக அறிமுகம்



16-07-22 அன்று திராவிட நட்புக் கழக அறிமுகக் கூட்டத்தில் தோழர்கள் உமா, இளங்கோ, வழக்கறிஞர் இளஞ்சித்திரன் ஆகியோர்

## திண்டுக்கல் பேரவைக் கூட்டம்



23-07-22 அன்று நடந்த திண்டுக்கல் மேற்கு மாவட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மாவட்ட அமைப்புக் கூட்டத்தில் தோழர்கள் ப.புலேந்திரன், ப.விடுலை, திராவிட அசுரன், ச.ஞானசேகர், ஜெயச்சந்திரன் ஆகியோர்.

## ஈரோடு மாவட்டக் கலந்துரையாடல்



ஈரோடு மாவட்டப் பேரவையின் கலந்துரையாடல் கூட்டத்தில் தோழர்கள் காசு. நாகராசன், அ.தமிழ்க் குமரன், சேகர் உள்ளிட்டத் தோழர்கள்.

# இடைநிற்றலுக்கு வழிவகுக்கும் புதிய கல்விக் கொள்கை!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

கள்ளக்குறிச்சி மாவட்டம் கனியாமூர் சக்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவி ஸ்ரீமதி கடந்த இரண்டு வாரத்துக்கு முன்பு மர்மமான முறையில் மரணமடைந்ததைத் தொடர்ந்து நடைபெற்ற போராட்டம் கலவரமாக மாறியது. பின்னர் நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்று மாணவி ஸ்ரீமதியின் உடலை அவரது பெற்றோர் நல்லடக்கம் செய்தனர்.

இந்த சோகம் மக்கள் மனதில் இருந்து நீங்குவதற்குள் திருவள்ளூர் மாவட்டம் மப்பேடு அருகே உள்ள கீழ்சேரியில், அரசு நிதி உதவி பெறும் "சேக்ரட் ஹார்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளி" விடுதியில் தங்கிப் படித்து வந்த பன்னிரெண்டாம் வகுப்பு மாணவி சரளா (திருத்தணியை அடுத்த தக்களூர் கிராமத்தைச் சேர்ந்த பூசனம் என்பவரது 17 வயது மகள்) மர்மமான முறையில் தூக்கில் தொங்கினார்.

சம்பவத்தன்று காலை வழக்கம் போல் சீருடை அணிந்துப் பள்ளிக்குப் புறப்பட்ட மாணவி சரளா தோழிகளுடன் உணவு சாப்பிடுவதற்காக விடுதியில் உள்ள அறைக்குச் சென்றார். அப்போது திடீரென விடுதி அறைக்குச் செல்வதாக மற்ற தோழிகளிடம் கூறி விட்டுச் சென்ற மாணவி சரளா நீண்ட நேரம் ஆகியும் திரும்பி வராததால் சந்தேகம் அடைந்த தோழிகள் விடுதி அறைக்குச் சென்று பார்த்தபோது தூக்கில் தொங்கிய நிலையில் சரளா பிணமாகக் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

அதைத் தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் உள்ள தனியார் மருந்தியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வரும் விழுப்புரம் மணி நகரைச் சேர்ந்த 17 வயது மாணவி ஒருவர் கல்லூரிக் கட்டிடத்தின் முதல் மாடியில் இருந்து குதித்துத் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார். மயங்கிய நிலையில் இருந்த மாணவியை மீட்டு சிகிச்சைக்காக விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் மாணவி அனுமதிக்கப்பட்டு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது போன்ற தொடர் சம்பவங்களை நாம் சாதாரண தற்கொலைகள் என்று எளிதில் கடந்து சென்று விட இயலாது. ஏனெனில் இது போன்ற சம்பவங்களில் தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவிகளே தொடர்ந்து பாதிக்கப்படுகின்றனர். அரசுப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவியருக்கு இது போன்ற சிக்கல்கள் ஏற்படுவதில்லை. அதே போன்று மாணவர்களுக்கும் இந்தச் சிக்கல்கள் எழுவதில்லை. இதைக் கூர்ந்து நோக்கினால் பெண் கல்வியைச் சீர்குலைக்கும் சதியாக இருக்குமோ என்ற ஐயம் ஏற்படுகிறது.



இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாடு மற்றும் கேரளா பெண் கல்வியில் சிறந்து விளங்குகிறது என்பதால் தமிழ்நாட்டின் கல்விக் கட்டமைப்பை சிதைத்துக் காவிக் கூடாரமாக மாற்ற நினைக்கும் மதவாத சக்திகள் இது போன்ற சம்பவங்களின் பின்னணியில் இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. கள்ளக்குறிச்சி சக்தி பள்ளி உரிமையாளர் திரு. இரவிக்குமார் இத்தகையப் பின்புலம் கொண்டவர் என்பதால் இந்தச் சந்தேகம் மேலும் வலுவாகிறது. புதிய தேசியக் கல்விக் கொள்கையின் முக்கிய அம்சங்களில் ஒன்றான "Multiple Entry Multiple Exit" என்பது இடைநிற்றலுக்கு (பெரும்பாலும் மாணவியரின் இடைநிற்றலுக்கு) வழி வகுக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது போன்ற நிகழ்வுகளுக்கு உரியத் தீர்வாக தனியார் கல்வி நிறுவனங்களைத் தமிழ்நாடு அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று இந்தியப் பொதுடைமைக் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதன் படி அரசு ஒரே இரவில் இது போன்று முடிவெடுத்து விட இயலாது. ஆயினும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு அமைந்த கடந்த ஓராண்டில் படிப்படியாக அரசுப் பள்ளிகளின் மாணவர் சேர்க்கை உயர்ந்துள்ளது.

மருத்துவப் படிப்பில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% இடஒதுக்கீடு என்பதற்கு உச்சநீதிமன்றம் வரை சென்று உறுதிப்படுத்தியது, ஆறு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் பயின்ற மாணவர்களுக்குப் பொறியியல் உள்ளிட்ட தொழிற்கல்வியில் 7.5% இடஒதுக்கீடு வழங்கியது. அவர்களது அனைத்துக் கட்டணத்தையும் அரசே ஏற்றது. ஒன்பதாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் மாற்றுச் சான்றிதழ் இல்லாமல் தனியார்ப் பள்ளிகளில் இருந்து அரசுப் பள்ளிக்கு மாற வழி வகை செய்தது. "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்" என்பதை "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர்கல்வி உறுதியளிப்புத் திட்டம்" என மாற்றி ஆறு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் பயின்ற மாணவியருக்கு அவர்கள் உயர்கல்வி பயிலும் காலம் முழுவதும் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்க ஆணை பிறப்பித்துள்ளது. இவை போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மூலம் மக்களிடம் மனமாற்றம் ஏற்பட்டுத் தங்கள் குழந்தைகளை அரசுப் பள்ளிகளில் சேர்க்கத் தொடங்கி உள்ளனர். மதுரை மாவட்டம் ஒத்தக்கடை அரசு மேல்நிலைப்பள்ளியின் மாணவர்கள் எண்ணிக்கை நான்காயிரம் ஆக உயர்ந்துள்ளது என்பது இதற்குச் சரியான எடுத்துக்காட்டு. இத்தகைய நிலை மாநிலம் முழுவதும் ஏற்பட வேண்டும் என்பதே நமது விருப்பம்.

பெண் கல்வியைப் பேணிக் காக்க அனைவரும் உறுதி ஏற்போம். !!

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian